(11)

171357

1981-7-21

Sri Lanka

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

1981 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம்

[1981, பெப்ரவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1981, மார்ச்சு மாதம் 06 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

1981 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம்

[1981, பெப்ரவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—இ. 61/80
1360

1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும், 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இலங்கையிலிருப்பவரும் அல்லது இலங்கைக்கு வருபவரும் அத்துடன் பதினாறு வயதை அடைந்தவரும் அல்லது பதினாறு வயதை அடைகின்றவரும்—

(அ) இரண்டாம் உட்பிரிவினது ஏற்பாடுகளின் செயற்பாடு காரணமாகப் பதிவுசெய்யப்படவேண்டியதற்கு ஆளாகாத ; அல்லது

(ஆ) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அத்தேதிக்கு முன்னர், அத்தேதியன்று அல்லது அத்தேதிக்குப் பின்னர் இலங்கைக்கு வந்திருந்த அல்லது வருகின்ற ; அல்லது

(இ) அச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக, அத்தேதியன்று அல்லது அத்தேதிக்குப் பின்னர் இலங்கையில் தங்கியிருக்கின்ற ; அல்லது

(ஈ) 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இந்திய—இலங்கை உடன்படிக்கை (செயற்படுத்தல்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ், இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகற்றப்படுவதற்கு ஆளாகின்ற,

ஆனாலாகுவராக இல்லாதவரும்ான ஒவ்வொரு ஆளும் பதிவுசெய்யப்படுவதற்கு ஆளாகவுள்ள ஓர் ஆளாகவிருத்தல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவின்கீழ் குறித்த சில ஆட்கள் தவறொன்றிற்குக் குற்றவாளியல்லாதவராகக் கருதப்படல்.

3. (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதினாறு வயதை அடைந்துள்ளவரும், ஆனால் பதினெட்டு வயதை அடையாதவரும் அதன் காரணமாக, முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கு ஆளாகாதவரும், அத்துடன் இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் ஏற்பாடுகளின் காரணமாக அத்தகைய தேதியன்று அவ்வாறு பதிவுசெய்யப்படுவதற்கு ஆளாகுபவருமான ஆள் எவரும், அச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழும் அச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் அவ்வாறு பதிவு செய்துகொள்வதற்கென விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் விண்ணப்பமொன்றினைச் செய்வாராயின், முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவின் கீழான தவறொன்றிற்குக் குற்றவாளியல்லாதவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவில், "விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதி" என்பது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்ட ஆள் எவரும், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 52 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் பயனாக, அச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழும் ஏற்பாடுகளுக்கிணங்கவும், எந்தக் காலப்பகுதிக்குள் பதிவுசெய்துகொள்ள விண்ணப்பிக்க வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளாரோ அந்தக் காலப்பகுதி எனப் பொருள்படும்.